தனி அலுவலர் மருங்கூர் ஊராட்சி / பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை. திரு.எல்.ரவிச்சந்திரன்,

ந.க.எண்.ஆ4/2172/2019 நாள்:ரு .11.2019

பொருள்:- புதிய மனைப்பிரிவு – ஊராட்சி ஒன்றியம் பண்ருட்டி – மருங்கூர் ஊராட்சி – மருங்கூர் கிராமம் – சர்வே எண். 183/1, 183/2A-குட்பட்ட 9.24 ஏக்கர் (அ) 37407.00 சமீ பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டது – இறுதி அனுமதி வழங்கி உத்தரவிடுதல்– சார்பாக.

பார்வை:-
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண் 4815 / 2018 விம, நாள்.30.08.2019.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் ந.க.எண்.4815 /2018/விம, நாள்.29.03.2019.
3. காடாம்புலியூர் – சார் பதிவாளர் அலுவலக பத்திர எண் :2373/2019 நாள்.19.08.2019.
4. மருங்கூர் ஊராட்சி தீர்மானம் எண். 46, நாள்.04.11.2019.
5. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD4(3)) துறை நாள்.04.05.2017.

❖❖❖❖

உத்தரவு

பார்வை 1–ல் காணும் மனு வாயிலாக விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தின் மூலம் கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் மருங்கூர் ஊராட்சி மற்றும் மருங்கூர் கிராம சர்வே எண். 183/1, 183/2A-குட்பட்ட 9.24 ஏக்கர் (அ) 37407.00 சமீ பரப்பளவு இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் கடிதத்தின் மூலம் மேற்படி மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் பூங்காகளுக்கான பொது இடத்தினை தானமாக பெற்றுக்கொள்ள தெரிவித்ததனை தொடர்ந்து சாலைகள், மூலமுடக்குகள் பகுதிகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றினை தனி அலுவலர் மருங்கூர் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பண்ருட்டிக்கு தானமாக ஒப்படைக்க செய்யப்பட்டு காடாம்புலியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2373/2019 நாள்.19.08.2019 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு அமைய மருங்கூர் ஊராட்சி தீர்மான எண்.23 நாள்.23.08.2019 –ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் உள்ள சாலைகள் தார்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் தெருமின் விளக்குகள் வசதி செய்திட ரூ.149759/– மருங்கூர் ஊராட்சி கணக்கு எண் 6721565390–ல் 01.10.2019 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 1–ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு புன்செய் நிலத்திலிருந்து குடியிருப்பு மனைப்பிரிவு பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் பார்வை 5–ல் காணும் அரசாணையின்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய

முத்திரைச் சட்டம், (மத்திய சட்டம்2/1899) உட்கூறு AA பிரிவு–47–ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து தொகை ரூ.464400/–யை 22.11.2019 அன்று அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறையின் மூலம் சர்வே எண்களை உட்பிரிவு செய்ய உரிய கட்டணம் செலுத்தப்பட்டு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| ஒதுக்கீடு விவரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 37407.00 ச.மீ (அ) 9.24 ஏக்கர் | |
| கோரிய மனைகள் | 135 | |
| ஒதுக்கிய மனைகள் | 129<br>[ இவற்றில் எளியோர் வாழும் குடியிருப்பு மனைகள் (Economically Weaker Section Plots) மனை எண்கள் (20, 22 முதல் 60 வரை, 107 முதல் 114 வரை மற்றும் 124 முதல் 129 வரை) | 10.38 % |

**பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை**

| | | |
|---|---|---|
| பூங்கா (மனைப்பிரிவிலுள்ள சாலைகளின் பரப்பு நீங்கலாக) | 2997.77 ச.மீ | 10.15 % |

**மனுதாரர் விற்பனைக்குரியது**

| | | |
|---|---|---|
| கடை–1 | 119.04 ச.மீ | |
| கடை–2 | 115.02 ச.மீ | 1.10 % |
| கடை–3 | 87.29 ச.மீ | |
| மொத்தம் | 321.35 ச.மீ | |

எனவே, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் மருங்கூர் ஊராட்சி மற்றும் மருங்கூர் கிராமம் சர்வே எண். 183/1, 183/2A-குட்பட்ட 9.24 ஏக்கர் (அ) 37407.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் புதிய மனைப்பிரிவு அமைத்திட விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் செயல்முறைகள் எண் 4815/2018 விம நாள்.30.10.2019–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு மற்றும் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(விம) எண்.44/2019 என எண்ணிடப்பட்டு அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு புதிய மனைப்பிரிவு அமைத்திட இறுதி அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – 1. வரைபடம் ம.வ/ந.ஊ.உ.இ(விம) எண்.44/2019
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் எண் 4815 / 2018 விம நாள்.29.03.2019– ல் வழங்கப்பட்ட ஒப்புதல் மற்றும் நிபந்தனைகள்

தனி அலுவலர் மருங்கூர் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பண்ருட்டி

பெறுதல்

திரு. எஸ். விஸ்வநாதன்,
இயக்குநர் / பவர் ஏஜண்ட்,
டேனெக்ஸ் பவர் ஜெனரேசன் லிட்.,
குள்ளஞ்சாவடி ரோடு மருங்கூர்.

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர் (ஊ) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. சார் பதிவாளர், காடாம்புலியூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

# நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு.M.ஸ்ரீதர், B.E., M.Plan.,

ந.க.எண்.4815/2018/விம நாள்: 30.08.2019

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மண்டலம் – கடலூர் மாவட்டம் – பண்ருட்டி வட்டம் – பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் – மருங்கூர் கிராமம் – புல எண்கள்.183/1,183/2A-குட்பட்ட இடத்தில் 9.24 ஏக்கர் (அ) 37407.00 ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1) மனுதாரர் திரு.S விஸ்வநாதன், மருங்கூர் அவர்களின் இணையதள விண்ணப்பம் நாள்:09.10.2018.
2) அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 16.06.2003.
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/LA2, நாள்19.04.2012 மற்றும் 24.05.2012.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/1988/பிசிசி, நாள் 27.04.1988.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/2000/எல் ஏ2, நாள்: 07.11.2002.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16985/2000/எல்ஏ2, நாள் 29.09.2007.
7) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:21.08.2019 (நன்னிலை வரி செலுத்தக் கோரியது)
8) மனுதாரர் நன்னிலை வரி செலுத்தி விபரம் பெறப்பட்ட நாள்:26.08.2019
9) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12544/2014/சிபி, நாள் 04.07.2014.
10) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(3)] துறை நாள்:04.05.2017

-----

**உத்திரவு:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மருங்கூர் கிராமம், புல எண்கள்.183/1,183/2A-குட்பட்ட இடத்தில் 9.24 ஏக்கர் (அ) 37407.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரி பார்வை 1–ல் காணும் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவில் அமையும் உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்காவினை பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் தானப்பத்திரம் எண்.2373/2019 நாள்: 19.08.2019–ன் படி ஒப்படைப்பு செய்து அதற்கான விபரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை (7)ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் செலுத்த கோரப்பட்டு பார்வை (8)ல் காணும் மனுதாரர் கடிதத்தில் நன்னிலை வரி கட்டணமாக ரூ.39,600/–(ரூபாய் முப்பத்து ஒன்பதாயிரத்து அறுநூறு மட்டும்) SBI, விழுப்புரம் கிளையில் 27.08.2019 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>ம.வ/ந.ஊ.உ.இ(விம)எண்.**44/2019**</u> என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை (4) மற்றும் (5)ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை (10)ல் காணும் அரசாணையின்படி இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(இ),(உ)குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சி மன்றம் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

புன்செய் நிலத்தில் இருந்து குடியிருப்பு மனைப்பிரிவு பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், பார்வை (11)ல் காணும் அரசாணையின்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம், (மத்திய சட்டம்2/1899) உட்கூறு AA பிரிவு–47–இன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை உள்ளாட்சி வதுலித்து கீழ் காணும் அரசக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்.

**<u>Head of Account: (Land use Conversion Charge)</u>**

0217 Urban Development – 60
Other Urban Development Schemes 800
Other Receipts-AS Receipts Under
Land use conversion charges -27
Non Taxation fees – 09 collections.
**DPC: 0217-60-800-AS – 2790**

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)–ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms.No.71, RDLA dated 16.06.2003 & G.O.No.134,M.A.WS, dated 20.09.2002 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

EWS மனைகள் பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மேற்படி மனைகளை (மனை எண்கள். மனை எண்கள். 20, 22 முதல் 60 வரை, 107 முதல் 114 வரை மற்றும் 124 முதல் 129 வரை) மனை உட்பிரிவு/மனை ஒருங்கிணைப்பு/மனை உபயோக மாற்றம் செய்யக்கூடாது.

ஊராட்சி ஒன்றியம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை தனி புல உட்பிரிவு பெற வட்டார வளர்ச்சி அலுவலர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

167

# அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு: | 9.24 ஏக்கர் (அ) 37407.00 ச.மீ | |
| கோரிய மனைகள்: | 135 | |
| ஒதுக்கிய மனைகள்: | 129<br>[இவற்றில் எளியோர் வாழும் குடியிருப்பு மனைகள் (Economically Weaker Section Plots) மனை எண்கள். 20, 22 முதல் 60 வரை, 107 முதல் 114 வரை மற்றும் 124 முதல் 129 வரை) | |

**மனுதாரர் விற்பனைக்குரியது**

| | | | |
|---|---|---|---|
| கடை –I | 119.04 ச.மீ | 321.35 ச.மீ | ---1.10% |
| கடை – II | 115.02 ச.மீ | | |
| கடை – III | 87.29 ச.மீ | | |

**பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை**

| | | |
|---|---|---|
| பூங்கா (மனைப்பிரிவிலுள்ள சாலைகளின் பரப்பு நீங்கலாக) | 2997.77 ச.மீ | ---10.15% |

**சிறப்பு நிபந்தனைகள்:**

1) பார்வை 10–ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிறப்பு நிபந்தனையின்படி "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2) உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா என்பதை செயல் அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) மனுதாரரால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்கா பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் சொத்து கணக்கில் பதிவு செய்யப்பட்டதன் விவரத்தினை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளை மனுதாரர் மற்றும் உள்ளாட்சி கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

4) மனைகள் மற்றும் சாலைகள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/ந.ஊ.உ..இ(விம) எண். 44/2019 எண்ணிடப்பட்டுள்ள வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உத்தேச மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம், மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உத்தேச மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட ஆணையின் நகலையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>இணைப்பு</u>
ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –2 தொகுப்பு

30/8/19

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.
30/8/19

<u>பெறுநர்:</u>
வட்டார வளர்ச்சி அலுவலர்,
பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம்,
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

<u>நகல்:</u>
Thiru.S. Viswanathan,
Director /Power Agent,
Tannex Power Generation Ltd.,
Kullanchavadi Road,
Marungur Village,
Panruti Taluk;
Cuddalore District – 607 805